


புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2050 | டிசம்பர் 19, 2019 | புரட்சி 18 | முழக்கம் 49 | விலை: ரூ.3.00


# அன்று ‘அவதாரங்களாக’ வந்த பார்ப்பனர்கள் இன்று ‘ஆட்சி அதிகாரங்களாக’ வருகிறார்கள்

# ‘குடியுரிமை’ சட்டத்தின் பின்னணி

இஸ்லாமியர்களை எதிரிகளாகக் கட்டமைத்து வேத பார்ப்பன புரோகிதக் கும்பல் இந்துக்களை அணி திரட்டுகிறது. இதுவே ‘அவாளின்’ நீண்டகால தந்திரம். பார்ப்பனரல்லாத ‘இந்து’க்களை ‘வர்ணம்–ஜாதி’களாக்கி, ‘சூத்திரர்’, ‘பஞ்சமர்’ என்று இழிவு படுத்தும் பார்ப்பனர்கள், தங்களின் சமூக-புரோகித மேலாதிக்கத்தை வெகு ‘இந்து’ மக்களிடம் மறைப்பதற்கு ஓர் எதிரியைக் கட்டமைக்க வேண்டியிருக்கிறது. அதற்கு ‘இஸ்லாமியர்கள்’ பலிகடாவாக்கப்படுகிறார்கள்.

> **பார்ப்பனர் – திராவிடர் போராட்டம் ரொம்பவும் வளர்ந்துவிட்டது; பார்ப்பனர்களும் துணிந்துவிட்டார்கள்; துணியக் காரணமும் இல்லாமல் இல்லை. இன்று ஆட்சி அவர்கள் அதிகாரத்தில் இருக்கிறது. அநேகமாக அவர்கள் ஆதிக்கத்திற்கு இதுவே கடைசி காலமாகவும் இருக்கக் கூடும். இன்று தவறின், நாளை ஆட்சி யார் கைக்குச் செல்லுமோ என்று அஞ்சுகிறார்கள். ஆகவே ஆட்சி தம் ஆதிக்கத்தில் உள்ள போதே நம்மீது பாய்ந்து தம் ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்ள நினைக்கிறார்கள்.**
>
> **– பெரியார், ‘விடுதலை’ 19.03.1948**

- காஷ்மீரில் 370ஆவது பிரிவை நீக்கி இஸ்லாமியர்களின் சிறப்புரிமையை பறித்தார்கள்.
- அயோத்தியில் 400 ஆண்டுகளுக்கு மேலாக இஸ்லாமியர்களிடமிருந்து ‘பாப்ரி மஸ்ஜித்’ - 12 இலட்சம் ஆண்டுகளுக்கு முன் திரேதாயுகத்தில் பிறந்ததாகக் கூறப்படும் ‘இராமன்’ பிறந்த இடம் என்று கூறி உச்சநீதிமன்றம் வழியாகத் தீர்ப்பைப் பெற்றார்கள்.

இப்போது இந்தியாவின் ‘குடியுரிமை’ பெற- ஒரு குடிமகன் இஸ்லாமியனாக இருக்க முடியாது என்று இஸ்லாமியரை மீண்டும் தனிமைப்படுத்தும் ஒரு சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள்.

காஷ்மீர் பிரச்சினை அயோத்தி தீர்ப்புகளில் வெற்றி பெற்றுவிட்ட இறுமாப்பில் குடியுரிமைச் சட்டத்தைக் கொண்டு வந்தது பா.ஜ.க. ஆட்சி. விளைவு எதிர்மறையாகிவிட்டது.

வடகிழக்கு மாநிலங்களிலும் தலைநகர் டெல்லியிலும் உ.பி.யிலும் ‘மதவாத’ சட்டத்துக்கு எதிராகப் போராட்டங்கள் தீவிரமடைந்துவிட்டன. தமிழ்நாட்டில் இயக்கங்களும், தி.மு.க. உள்ளிட்ட அரசியல் கட்சிகளும் களமிறங்கிப் போராடுகின்றன. கேரளாவில் இரு துருவங்களாக நிற்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் காங்கிரசும் இணைந்து போராட்டக் களத்துக்கு வந்துவிட்டன.

இது குறித்து சில அடிப்படையான அம்சங்களைப் பார்ப்போம்.

- 1955ஆம் ஆண்டு இந்தியாவில் குடியுரிமை சட்டம் கொண்டு வரப்பட்டது. அதற்குப் பிறகு அதில் பல திருத்தங்கள் செய்யப்பட்டன. சட்டமும் சட்டத் திருத்தங்களும் குடியுரிமை வழங்குவதற்கு மதத்தை அடிப்படையாக ஏற்கவில்லை. ஒரு நாட்டில் அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்ட மக்கள் இந்தியாவுக்கு அடைக்கலம் தேடி வந்தால் அவர்களுக்கு குடியுரிமை வழங்குதல் குறித்தே சட்டத்தின் பிரிவுகள் உருவாக்கப்பட்டன.
- பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் நாடுகளிலிருந்து மதத் துன்புறுத்தலுக்கு உள்ளாகிய இந்துக்கள், கிறிஸ்தவர்கள், சீக்கியர்கள் உள்ளிட்ட பிரிவினர் இந்தியாவில் 5 ஆண்டுகள் தங்கியிருந்ததற்கான ஆவணங்களை சமர்ப்பித்தால் குடியுரிமை வழங்கப்படும் என்று கூறும் இந்த திருத்தச் சட்டம் இஸ்லாமியர்களாக இருந்தால் குடியுரிமை வழங்கப்பட மாட்டாது என்று கூறுகிறது. இஸ்லாமிய மத ஆட்சி நடக்கும் பாகிஸ்தான் - பங்களாதேஷ் நாடுகளில் மத துன்புறுத்தல்களுக்குள்ளாகிறவர்கள். இஸ்லாமியர்கள் அல்ல என்று மத்திய அமைச்சர்கள் கூறுகிறார்கள்.

  அடைக்கலம் தேடி வரும் மக்களை அரசியல் - இனம் - ஒடுக்குமுறை என்று பார்க்காமல் ஒரு மதச்சார்பற்ற நாடு மதத்தின் அடிப்படையில் ஏன் பார்க்க வேண்டும் என்ற கேள்விக்கு பதில் இல்லை.

  பாகிஸ்தான் நாட்டிலேயே இஸ்லாமியர்களின் வேறு பிரிவினரான அகமதியர்கள், ஷியாக்கள் துன்புறுத்தப்படுகின்றனரே என்ற கேள்விக்கும் பா.ஜ.க. பார்ப்பன ஆட்சி மவுனம் சாதிக்கிறது.
- இந்தியாவில் எல்லைப்புற நாடுகளாக பாகிஸ்தான் - பங்களாதேஷ் நாடுகள் இருப்பதால் அந்நாடுகளிலிருந்து அடைக்கலம் தேடி இந்தியா வருவதாக ஆட்சியாளர்கள் கூறுகிறார்கள். அப்படியானால் ஆப்கானிஸ்தான் நாட்டையும் ஏன் சேர்த்துக் கொண்டார்கள்? அது நிலவியல் அடிப்படையில் இந்தியாவின் அண்டை நாடு அல்லவே என்ற கேள்விக்கும் அவர்களிடம் பதில் இல்லை.
- இந்தியாவின் எல்லைப் பகுதிகளை பகிர்ந்து கொள்ளும் அண்டை நாடுகளான நேபாளம், மியான்மர், பூடான் போன்ற நாடுகள் ஏன் விலக்கப்பட்டுள்ளன? மியான்மர் நாட்டில் நடக்கும் இராணுவ கொடுங்கோல் ஆட்சியில் ‘ரோகிங்கா முஸ்லிம்கள்’ இனப் படுகொலைக்கு உள்ளாகிறார்கள். உயிர் பிழைக்க இந்தியாவுக்கு அடைக்கலம் தேடி வரும் அவர்களை அனுமதிக்க இந்தியாவின் பார்ப்பன பாசிச ஆட்சி மறுக்கிறது. மற்றொரு அண்டை நாடான பூடானில் ‘வஜ்ராயன பவுத்தம்’ என்ற மதத்தின் அடிப்படையில் ஆட்சி நடக்கிறது. அங்கே கிறிஸ்தவர்கள் ‘தேவாலயங்களில்’ வழிபடும் உரிமை மறுக்கப்படுகிறது. தேவாலயங்களில் வழிபடுவதற்காகவே அவர்கள் இந்தியாவுக்கு வருகிறார்கள். பாகிஸ்தான் - பங்களாதேஷ் கிறிஸ்தவர்களுக்கு குடியுரிமை உண்டு. ஆனால் பூட்டானில் கிறிஸ்தவர்களுக்கு உரிமை இல்லை என்றால், என்ன காரணம்? பூட்டான் இஸ்லாமிய நாடாக இருந்திருந்தால் சட்டத் திருத்தத்தில் சேர்த்திருப்பார்கள்.
- இதைவிடக் கொடுமை, ஈழத்திலிருந்து கடந்த 30 ஆண்டுகளாக தமிழ்நாட்டில் அகதிகளாக வாழும் தமிழர்களுக்கு குடியுரிமை வழங்குவதற்கு பார்ப்பன பா.ஜ.க. ஆட்சி தயாராக இல்லை. ஈழத் தமிழர்கள் தமிழர் என்ற இன அடையாளத்தோடு மதம் என்ற அடையாளத்துக்காகவும் சிங்கள-பவுத்த பேரினவாத ஆட்சியால் துன்புறுத்தலுக்கும் ஒடுக்குமுறைக்கும் உள்ளாக்கப்படுகிறார்கள்.

  கடந்த காலங்களில் பா.ஜ.க.வினரும் சங்பரிவாரங்களும் இந்து முன்னணியும் ‘ஈழத் தமிழர்கள் இந்துக்கள்’ என்று உரிமை கோரி அவர்களுக்காக பேசியதை நாடு மறந்து விடவில்லை. ஆயிரக்கணக்கான இந்துக் கோயில்கள் இடிக்கப்பட்டதைக் கண்டித்து ‘இந்து மக்கள் கட்சி’ ஆர்ப்பாட்டங்களை நடத்தியது. இப்போது ஈழத் தமிழர்கள் மதரீதியாக ஒதுக்கப்படவில்லை; இன ரீதியாக ஒதுக்கப்படுகிறார்கள் என்கிறது, பா.ஜ.க. ஆட்சி. ‘இந்து’ அடையாளப் போர்வையுடன் மோடி ஆட்சியிடம் நெருங்கி விடலாம் என்று தமிழ்நாட்டில் காசி ஆனந்தன் போன்றவர்களும் ஈழத்தில் ‘சிவசேனா’ அமைப்பைத் தொடங்கிய சச்சிதானந்தம் போன்றவர்களும் இப்போது கையறு நிலைக்கு அவர்கள் நம்பிய ‘காவி’ ஆட்சி யாளர்களாலேயே தள்ளப்பட்டுவிட்டார்கள். பார்ப்பனர்கள் ஈழத் தமிழர் பிரச்சினையை பெரியார் இயக்கத்துடனும் திராவிட இயக்கத்துடனும் தான் இணைத்துப் பார்ப்பார்கள் என்பதை இப்போதாவது ‘இந்து அரிதாரம்’ பூசிக் கொண்ட அந்த ஈழத் தமிழர்கள் புரிந்து கொள்வது நல்லது.
- இந்தியா ஒரு மதச் சார்பற்ற நாடு; உச்சநீதிமன்றத்தின் பல வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்புகளும் இதை உறுதி செய்துள்ளன. அரசியல் சட்டத்தின் 14ஆவது பிரிவு என்ன கூறுகிறது? இந்திய நிலப் பரப்புக்குள் எந்த நபருக்கும், எந்தக் குடிமகனுக்கும் ‘சட்டப்படி சமத்துவமானவர்கள்’ என்ற உரிமையையே வழங்குகிறது. மதத்தின் அடிப்படையில் இனத்தின் அடிப்படையில் பாகுபாடு காட்டவில்லை.
- ‘இந்து’ ஆங்கில நாளேட்டில் ஷதன் ஃப்ராசத் எழுதிய கட்டுரையில் கீழ்க்கண்ட கேள்விகளை எழுப்புகிறார்.

  “மியான்மரிலிருந்து தனது உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக இந்தியாவுக்கு வரும் ஒரு ரோகிங்கியா முஸ்லிம், இந்தியக் குடியுரிமை பெற முடியாது. ஆனால் மத ரீதியில் உயிருக்கு அச்சுறுத்தலே இல்லாத வங்க தேசத்திலிருந்து பொருள் தேடலுக்காக இந்தியாவுக்கு வரும் ‘இந்து’வுக்கு மத ரீதியான அச்சுறுத்தலுக்கு உள்ளானவர்கள் என்று குடியுரிமை வழங்குவது எந்த வகையில் நியாயம்? குண்டுவீச்சிலிருந்து உயிர் தப்பியதற்காக ஒரு கள்ளத் தோணியில் ஏறி ஈழத்திலிருந்து தமிழ் நாட்டுக்கு அடைக்கலம் தேடி வரும் ஒரு தமிழருக்கு குடியுரிமை இல்லை என்று மறுப்பது என்ன நியாயம்?” என்ற நியாயமான கேள்விகளை எழுப்புகிறது அக்கட்டுரை.
- மத அடிப்படையில் காங்கிரஸ் ஆட்சி இந்தியாவிலிருந்து பாகிஸ்தானைப் பிரித்ததால்தான் இப்படி ஒரு திருத்த சட்டம் கொண்டு வந்ததாக உள்துறை அமைச்சர் அமித் ஷா கூறுகிறார். இது அப்பட்டமான வரலாற்றுப் புரட்டு.
- ‘ஆரிய சமாஜம்’ அமைப்பின் தலைவர்களில் ஒருவரான பாய் பரமானந்தா (1874-1947) 1908இல் என்ன எழுதினார்?

  “சிந்து பகுதிக்கு அப்பாற்பட்ட நிலப்பரப்பை ஆப்கானிஸ்தானத்துடனும், வடமேற்கு எல்லை மாகாணத்துடனும் இணைத்து முஸல்மான் களின் (இஸ்லாமியர்களின்) பெரிய ஆட்சியை உருவாக்க வேண்டும். அங்கு வாழும் இந்துக்கள் வெளியேறி இங்கே வரவேண்டும். இங்கு வாழும் முஸல்மான்கள் வெளியேறி அவர்கள் பகுதிக்குப் போய்விட வேண்டும். (பரமானந்த பாய் எழுதிய ‘எனது வாழ்வின் கதை’ நூல்)

  இவர் எழுதியது 1908இல்! 1937இல் இந்து மகாசபை தலைவர் சாவர்க்கர் என்ன கூறினார்?

  “இந்தியாவில் இரண்டு முரண்பட்ட தேசங்கள் அருகருகே வாழ்ந்து கொண்டிருக்கின்றன. ஒன்று இந்துக்கள் தேசம்; மற்றொன்று முஸ்லிம்கள் தேசம். இரண்டும் ஒரே தேசமாக முடியாது.” (அகமதாபாத்தில் நடந்த இந்து மகாசபை கூட்டத்தில் பேசியது)

  1939இல் ஆர்.எஸ்.எஸ். தலைவர் கோல்வாக்கர் என்ன கூறினார்?

  “இந்துக்கள் அல்லாதவர்கள் இந்து கலாச்சாரத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும். இந்து மதத்தைப் புகழ்ந்து பேச வேண்டும். அதைத் தவிர இந்துக்கள் அல்லாதவர்களுக்கு வேறு எந்த சிந்தனையும் இருக்கக் கூடாது.” (ஆதாரம்: ‘நாம் அல்லது நமது தேசியம் வரையறை’ என்ற நூல்)

  இவ்வளவுக்குப் பிறகுதான் 1940இல்தான் லாகூரில் முஸ்லிம் லீக் மாநாட்டில் பாகிஸ்தான் கோரிக்கையை ஜின்னா முன் வைத்தார். இதுதான் வரலாறு.
- மதத்தின் அடிப்படையில் துன்புறுத்தலுக்குள்ளாக்கப்படும் ‘இஸ்லாமியர்’ அல்லாத ‘இந்து’க்களுக்காகக் கண்ணீர் வடிக்கிறது பா.ஜ.க. பார்ப்பன ஆட்சி.

  ‘பார்ப்பனர்’ என்ற மைனாரிட்டி ஆதிக்கக் கும்பலின் ஒடுக்குமுறைக்கும் உரிமை பறிப்புக்கும் உள்ளாகி நிற்பவர்கள் பார்ப்பனரல்லாத ‘சூத்திர’,

(4ஆம் பக்கம்)

# நாடாளுமன்றத்தில் அதிகாரபூர்வ தகவல்கள்

## மத்திய அரசுத் துறை, உயர் கல்வி நிறுவனங்களில் இடஒதுக்கீடே இல்லை

**மத்திய அரசுத் துறை செயலாளர்களில் 82 பேர்களில் தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர் வெறும் 4 பேர்களே. 20 அய்அய்எம் நிறுவனங்களில் தாழ்த்தப் பட்ட, பழங்குடியினர் வெறும் 11 பேர்களே என்கிற அதிர்ச்சிகர தகவல் நாடாளுமன்றத்தில் வெளியாகியுள்ளது.**

மத்திய அரசுத்துறைகளில் உயர் பதவி களுக்கானப் பணியிடங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனமாகிய அய்அய்எம் கல்லூரிகளில் பேராசிரியர்களுக்கான பணியிடங்களில் இதர பிற்படுத்தப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்ட, பழங்குடி யினர்கள், முசுலீம்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் இல்லை என்று நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களின் கேள்விக்கு அமைச்சர்கள் அளித்த பதிலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் கே.சோமநாத்பிரசாத் எழுப்பிய கேள் விக்கு, மத்திய பணியாளர், பொது குறைகளை மற்றும் ஓய்வூதியத்துறை அமைச்சர் ஜித்தேந்திர சிங் எழுத்து மூலம் அளித்த பதிலில் குறிப்பிடுகையில், மத்திய அரசுத் துறைகளில் செயலாளர் பதவிக்கான 82 பணியிடங்களில் நான்கு இடங்களில் மட்டுமே தாழ்த்தப்பட்டவர்கள், பழங்குடியினர் உள்ளதாக வும், மத்திய அரசின் உயர்கல்வி நிறுவன மாகிய 20 அய்அய்எம் நிறுவனங்களில் தாழ்த்தப்பட்ட, பழங்குடியினத்தைச் சேர்ந்த பேராசிரியர்கள் 11 பேர் மட்டுமே உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மாற்றுத்திறனாளிகள் அதிகாரத்துறை, நில வளங்கள் துறை, மருந்தியல் மற்றும் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை ஆகிய துறைகளில் செயலாளர்களுக்கான பணியிடங்களில் தாழ்த்தப்பட்ட, பழங்குடி வகுப்பைச் சேர்ந்தவர்கள் தலா ஒருவர் மட்டுமே உள்ளனர்.

உயர்கல்வி நிறுவனங்களில் பேராசிரியர் களுக்கான பணியிடங்களிலும் அவர்களின் பிரதிநிதித்துவம் குறைவாகவே உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

மாநிலங்களவையில், காங்கிரஸ் கட்சியின் உறுப் பினர் பர்தாப் சிங் பாஜ்வா எழுப்பிய கேள்விக்கு மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் ரமேஷ்போக்ரியால் நிஷாங்க் பதில் அளித்தார்.

20 அய்அய்எம் கல்லூரிகளில் பேராசிரியர் பணியிடங்களில் ஒட்டு மொத்தமாக வெறும் 11 இடங்களில் மட்டுமே தாழ்த் தப்பட்ட, பழங்குடி யினத்தவர் உள்ளனர். அதன்படி, அகமதாபாத், கொல்கத்தா அய்அய்எம் கல்லூரிகள் உள்பட 12 அய்.அய்.எம். கல்லூரிகளில் தாழ்த்தப்பட்ட, பழங்குடியினத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஒருவர்கூட நியமிக்கப்படவில்லை.

பெங்களூரு, லக்னோ உள்ளிட்ட 5 அய்அய்எம் கல்லூரிகளில் பேராசிரியர் பணியிடங்களில் தாழ்த் தப்பட்ட அல்லது பழங்குடியினத்தைச் சேர்ந்தவர் களுக்கு ஓரிடம் மட்டுமே அளிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று, கோழிக்கோடு, ஷில்லாங், ஜம்மு ஆகிய அய்.அய்.எம். கல்லூரிகளில்பேராசிரியர் பணியிடங்களில் இரண்டு இடங்கள் மட்டும் தாழ்த்தப்பட்ட, பழங்குடியினத்தவருக்கு அளிக்கப் பட்டுள்ளது.

மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை கடந்த 20.11.2019 அன்று அய்அய்எம் இயக்குநர்களுக்கு சுற்றறிக்கை மூலம் உத்தரவு அனுப்பியுள்ளது. மத்திய கல்வி நிறுவனங்கள் (ஆசிரியர்களுக்கான இட ஒதுக்கீடு) சட்டம் 2019இன்படி, தாழ்த்தப்பட்டவர் களுக்கு 15 விழுக்காடு, பழங்குடியினருக்கு 7.5 விழுக்காடு, சமூக அளவிலும், கல்வியிலும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு (இதர பிற்படுத்தப் பட்டவர்களுக்கு) 27 விழுக்காடு, பொருளாதாரத்தில் நலிவுற்றவர்களுக்கு 10 விழுக்காடு என்கிற இடஒதுக்கீடு கட்டாயம். அந்த அடிப்படையிலேயே எதிர்காலத்தில் அனைத்து பணிநியமனங்களிலும், ரோஸ்டர் முறையிலேயே இடஒதுக்கீடு அளிக்கப்பட்டு நியமனங்கள் செய்யப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

கடந்த அரை நூற்றாண்டு காலமாகவே அய்அய்எம் உள்ளிட்ட மத்திய அரசின்கீழ் இயங்கும் உயர் கல்வி நிறுவனங்களில் பேராசிரியர்களின் நியமனங்களில் இடஒதுக்கீடு நடைமுறை பின்பற்றப்படாமலேயே இருந்துள்ளது.

அரசுத் துறைகளில் செயலாளர்கள், இணை செயலாளர்கள், கூடுதல் செயலாளர்கள், துணை செயலாளர்கள் ஆகிய பணியிடங்களுக்கான இடங் களில் தாழ்த்தப்பட்டவர்கள், முசுலீம்கள், இதர பிற்படுத்தப்பட்டவர்கள் மற்றும் பழங்குடியினர் உள்ளிட்டவர்களின் பிரதிநிதித்துவம்குறித்த தகவல்களை அளிக்குமாறு தேசியவாத காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர் கே.உசைன் தல்வாய் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்.

மத்திய அமைச்சர் பதில் கூறுகையில், உயர் பதவிக்கான பணியிடங்களில் உள்ளவர்களின் இடஒதுக்கீட்டு தகவல்கள் பராமரிக்கப்படுவதில்லை என்றார்.

பிரதிநிதித்துவம் குறித்த தகவல்கள் பணி நியமனத்தின் தொடக்கத்தில் திரட்டப்பட்டவையே ஆகும். உயர் பதவிக்கான பணியிடங்களில் பணி நியமனம், பதவி உயர்வில் இடஒதுக்கீட்டுப் பிரிவினரின் பிரதிநிதித்துவத் தகவல்கள் பராமரிக்கப்படுவதில்லை என்று அமைச்சர் பதிலில் குறிப்பிட்டார்.

### அரசியல் சட்ட எரிப்பு நாள் - தமிழீழ தேசிய தலைவர் பிரபாகரன் பிறந்த நாள் கருத்தரங்கம்

மதுரை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் நவம்பர் 25 அன்று மாலை 4 மணிக்கு தமிழீழ தேசிய தலைவர் பிரபாகரன் பிறந்த நாள் கருத்தரங்கம் நடைபெற்றது.

தமிழ்தேச மக்கள் முன்னணித் தலைவர்.மீ.த.பாண்டியன்; தமிழ்ப் புலிகள் கட்சி பொதுச் செயலாளர் பேரறிவாளன்; தமிழக வாழ்வுரிமை கட்சி பரப்புரைச் செயலாளர் பெரியார் சரவணன்; மகாமுனி - மே 17; குமரன் - புரட்சிகர இளைஞர் முன்னணி; கிட்டு ராசா - தபெதிக; பரிதி -தமிழ் தமிழர் இயக்கம்; மணிபாபா- தமிழக வாழ்வுரிமை பாதுகாப்பு மக்கள் கட்சி உள்ளிட்டோர் கருத்துரையாற்றினர். அன்று மாலை 6 மணிக்கு “ஜாதியை பாதுகாக்கும் சட்ட எரிப்பு நாள்” கருத்தரங்கம் நடைபெற்றது. எழுத்தாளர்.மதிமாறன் சிறப்புரையாற்றினார். நிகழ்விற்கு திவிக மதுரை மாவட்ட செயலாளர் மணி அமுதன். மா.பா தலைமை தாங்கினார். மாநகர் தலைவர் காமாட்சி பாண்டி முன்னிலை வகித்தார். வழக்கறிஞர்கள் - சட்ட கல்லூரி மாணவர்கள் -ஆதித்தமிழர் பேரவை , அகில இந்திய மஜ்லீஸ் கட்சி உள்ளிட்ட தோழமை அமைப்புத் தோழர்கள் மற்றும் திவிக மதுரை மாவட்ட கழக தோழர்கள், மேலூர் பொறுப்பாளர் சத்திய மூர்த்தி, மாளவிகா, பொன்னான்டி, குமார், மருது பாண்டி உள்ளிட்டோர் பங்காற்றினர்.

### திண்டுக்கல்லில் இராவணன் படத்திறப்பு

முடிவெய்திய கழகத்தின் பெரியாரியப் பணியாளர் இராவணன் நினைவேந்தல் மற்றும் படத்திறப்பு நிகழ்வு, 15.12.2019 அன்று காலை 10 மணியளவில் திண்டுக்கல், தலைமை அஞ்சலகம் அருகில் உள்ள வாழ்க வளமுடன் அரங்கில் நடைபெற்றது. நிகழ்விற்கு திராவிடர் இயக்கத் தமிழர் பேரவை மாநில அமைப்புச் செயலாளர் புலேந்திரன் தலைமை தாங்கினார். ஆனந்த் முனி ராசன், மரிய திவாகரன், கி. இரவிச்சந்திரன், கோபி கிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகிக்க, பெரியார் நம்பி வரவேற்புரையாற்றினார். இராவணன் படத்தைத் திறந்து கழகத் தலைவர் உரையாற்றினார். அதனைத் தொடர்ந்து மீ.த. பாண்டியன், துரை சம்பத் (த.பெ.தி.க.), பொள்ளாச்சி விஜயராகவன், உள்ளிட்ட அமைப்பு களைச் சேர்ந்த தோழர்கள் நினைவேந்தல் உரை நிகழ்த்தினர். பெரியாரிய உணர்வாளர் கூட்டமைப்பு சார்பாக நிகழ்வு ஒருங்கிணைப்பு செய்யப்பட்டது.



### குடியுரிமை திருத்தம்: ‘நோபல்’ பரிசு பெற்ற விஞ்ஞானி கடும் எதிர்ப்பு

மத்திய பாஜக அரசு நிறைவேற்றியுள்ள குடியுரிமை சட்டத் திருத்தமசோதாவுக்கு, நாட்டின் புகழ்பெற்ற நீதிபதிகள், ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகள், வரலாற்று ஆய்வாளர்கள், பொருளாதார அறிஞர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள் என அனைத்துத் தரப்பினரும் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில், வேதியியல் துறைக்கான ‘நோபல் பரிசு’ பெற்ற இந்திய வம்சாவளி தமிழரும், இலண்டன் ‘ராயல் சொசைட்டி’ தலைவருமான வெங்கட் ராமன் ராமகிருஷ்ணனும், குடியுரிமை சட்டத் திருத்தத்தை எதிர்த்துள்ளார். இந்தச் சட்டம் மூலம், ஜெர்மனியில் தேசிய இனவாதத்தைத் தூக்கிப் பிடித்த பாசிஸ்ட் ஹிட்லரின் பாதையில் இந்தியா பயணிப்பதாகவும், இது இந்தியாவுக்கு ஆபத்து என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

இது தொடர்பாக பேட்டி ஒன்றில் அவர் மேலும் கூறியிருப்பதாவது:

“நான் வெளிநாட்டில் வாழ்ந்தாலும் நான் இந்தியாவை மிகவும் விரும்புகிறேன். இந்தியா ஒரு சிறந்த சகிப்புத் தன்மையுள்ள இலட்சியத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாக நான் எப்போதும் நம்புகிறேன். இந்தியா வெற்றி பெற வேண்டும் என்றும் நான் விரும்புகிறேன். நாடு விடுதலையடையும்போது, எந்தவொரு மதத்திற்கும் சார்பில்லாத மதச்சார்பற்ற ஜனநாயகமாக இந்தியா தன்னை வடித்துக் கொண்டது. அதுதான் இந்தியாவின் இன்றைய பெருமைகள் அனைத்திற்கும் அடிப்படை. அதனால்தான், இந்தியாவில் 20 கோடி முஸ்லிம்கள் இருக்கிறார்கள். அதே சமயம் பாகிஸ்தானில் முஸ்லிம் அல்லாதவர்கள் அதிகம் இல்லை. ஒரு சதவிகிதம் மட்டுமே முஸ்லிம் அல்லாதவர்கள் இருக்கிறார்கள். நாம் பாகிஸ்தானியர்கள் அல்ல என்பதை நினைவில் கொள்ள வேண்டும். நாம் மதச்சார்பற்றவர் களாக இருப்பதால், வேறுபட்டவர்களாக இருக்கிறோம். இந்தியர்களின் சிறந்த அம்சம் இதுதான். அவ்வாறிருக்கையில், தற்போது கொண்டு வரப்பட்டுள்ள குடியுரிமை சட்டத் திருத்த மசோதா ஒரு தவறான நடவடிக்கை. தேவையற்ற ஒன்று. ‘நீங்கள் குறிப்பிட்ட மதத்தைச் சேர்ந்தவர். அதனால் உங்கள் மதமும் எங்கள் மதமும் ஒரே தரமுடையது அல்ல’ என்று 20 கோடி மக்களிடம் ஓர் அரசாங்கமே கூறுவதைப் போன்ற பிரிவினை எதுவுமில்லை. இந்திய அரசு கொண்டு வந்துள்ள குடியுரிமை சட்டத் திருத்தத்திற்கு எதிராக, இந்திய அறிஞர்கள் மற்றும் விஞ்ஞானிகள் கையெழுத்து இயக்கம் ஒன்றை நடத்தி வருகின்றனர். அதில் கையெழுத்து இடச் சொல்லி எனக்கும் அறிக்கை வந்தது. ஆனால், 1971ஆம் ஆண்டே நான் இந்தி யாவை விட்டு வெளியேறிய நபர் என்பதால், என்னால் அதில் கையெழுத்து இடமுடியாது.

எனினும் ஒன்று மட்டும் சொல்ல நினைக்கிறேன். நான் வழக்கறிஞர் இல்லை. ஆனால், சுயசிந்தனையுள்ள எந்த நீதிமன்றமும் இந்தக் குடியுரிமை திருத்தத்தை ஏற்றுக் கொள்ளாது என்று நம்புகிறேன். இன்று உலகமே தேசியவாதத்தாலும் இனவெறியாலும் பாதிக்கப்பட்டுள்ளது. தற்போது இந்தியாவையும் இந்த நோய் தாக்கியுள்ளது. இந்தியாவின் மீது எனக்கு பெரிய மதிப்பு உண்டு. நான் படிப்பதற்குப் பலவகையில் அந்த நாடு எனக்கு உதவியிருக்கிறது. ஆனால், அதே தேசத்தில், அரசே இன்று மதத்தால் மக்களைப் பிரிக்கிறது. இனச் சிறுபான்மையினர்களிலும் பெண் களிலும் அறிவார்ந்த நபர்களை உருவாக்கும் நோக்கத்துடன் இந்த நூற்றாண்டில் பல இயக்கங்களும் தனி நபர்களும் போராடி வருகின்றனர். இளைஞர்கள் போட்டி போட்டுக் கொண்டு அறிவார்ந்து முன்னேறி வருகிறார்கள். புதிதாகப் பலவற்றைக் கண்டுபிடிக்கிறார்கள். அவர்கள் அத்தனை பேருக்கும் இந்தச் சட்டத் திருத்தம் பெரிய இடர்ப்பாடாக இருக்கும்.

நினைவில் இருக்கட்டும், அறிவியல் சுதந்திர மாகச் செயல்பட வேண்டிய துறையாகும். குறிப்பிட்ட எந்த மதமும், வெறியும் அதில் திணிக்கப்படும்போது, அதனால் சுதந்திரமாகச் செயல்பட முடியாது. ஜெர்மனியின் அறிவியல் செயல்பாடுகள் நாஜிக்களின் தாக்கத்தி லிருந்தும் ஹிட்லரின் பாதிப்பிலிருந்தும் விடுபடு வதற்கு 50 ஆண்டுகள் ஆகின. குடியுரிமைச் சட்டத் திருத்தத்தை மேற்கொண்டால் அந்த நிலைமைதான் இந்தியாவுக்கும் ஏற்படும்.”

இவ்வாறு வெங்கட்ராமன் ராமகிருஷ்ணன் கூறியுள்ளார்.

– புரட்சிப் பெரியார் முழக்கம் 19.12.2019

## பள்ளிப் பாளையம் மாநாட்டில் கொளத்தூர் மணி உரை

# தமிழர் கல்வி–வேலை வாய்ப்புகளைப் பறிக்கும் ‘பார்ப்பன’ ஆட்சி கொள்கைகள்

*பள்ளிப்பாளையத்தில் 20.9.2019 அன்று நடந்த திராவிடர் விடுதலைக் கழகம் நடத்திய பரப்புரைப் பயணத்தின் நிறைவு விழா மாநாட்டில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிகழ்த்திய உரை.*

இரண்டு செய்திகளை முன் வைத்து தான் இந்த பயணம். ஒன்று எங்களுடைய கல்வி உரிமைகளை பறிக்கிறாய், வேலை வாய்ப்புரிமையை பறிக்கிறாய். வேலை வாய்ப்பு உரிமை என்பது, தமிழ்நாட்டில் உள்ள மத்திய அரசு நிறுவனங்களில் நமக்கு உரிமை வேண்டும் என்பது தான். அப்படித் தான் 2014இல் நாம் போராட்டத்தை முன்னெடுத்தோம். அன்பு தனசேகர் (தி.வி.க. தலைமைக் குழு உறுப்பினர்) பல்வேறு தகவல்களை திரட்டிக் கொடுத்தார். அதனடிப்படையில், பல்வேறு இயக்கங்களை உடனழைத்துக் கொண்டு சாஸ்திரி பவன் எதிரே ஆர்ப்பாட்டத்தை நடத்தினோம். தமிழ்நாட்டில் இயங்குகிற மத்திய அரசு அலுவலகங்களில், வெளி மாநிலத்து ஆட்களை பணிக்கு அமர்த்துவதை நிறுத்த வேண்டும் என்பதை கோரிக்கையாக வைத்து அந்த போராட்டத்தை நாம் நடத்தினோம். அதைத் தொடர்ந்து பல்வேறு இயக்கங்கள் இப்போதும் அது போன்ற போராட் டங்களை தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் கூட அதனுடன் வேறொன்றை சேர்க்க வேண்டியவர்களாக நாம் மாறியிருக்கிறோம்.

மத்திய அரசுப் பணிகளில் வெளி மாநிலத்தவர்களை நியமிக்காதே என்பது மட்டுமில்லாமல் தமிழ்நாட்டுப் பணிகளில் வெளி மாநிலத்தவர்களை பணியில் அமர்த்தாதே என்ற கோரிக்கையையும் தற்போது நாம் வைக்க வேண்டிய நிலைக்கு தமிழ்நாட்டில் அரசியல் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. புதிய கல்விக் கொள்கை என்பது, பல கல்விக் குழுக்கள், பல கல்வியாளர்களை நியமித்திருக்கிறார்கள். தமிழ்நாட்டில் விடுதலைக்கு முன்னாலிருந்து, ஆங்கிலேயர் காலத்திலிருந்தே கல்விக் குழுக்கள் நடந்து கொண்டுதான் இருக்கிறது. 1835 இல் மெக்காலே கல்வி முறையை கொண்டு வந்தார். இல்லை இல்லை அவர் ஆங்கிலத்தில் கல்வி முறையை கொண்டு வந்தார் என்று சொன்னார்கள். ‘30 ஆண்டுகளுக்குள் ஆங்கிலத்தில் கல்வி பெற்றவர்கள், அதில் உள்ள அறிவியலை மொழி மாற்றம் செய்து விடுவார்கள்’ அதன் பின் தாய் மொழியில் கல்வி நடக்கட்டும் என்று தான் அவர் சொன்னார்.

ஆனால் அப்படி நடக்கவில்லை, ஏனென்றால் முதன்முதலில் கல்வி பெற்றவர்கள், எப்படி சமஸ்கிருதத்தை தன் கைக்குள்ளே வைத்துக் கொண்டு கோவில்களிலும், வீட்டு நிகழ்ச்சிகள் உட்பட அனைத்து நிகழ்ச்சிகளிலும் முன்னிலை வகிக்கக் கூடிய பார்ப்பனர்கள் தான் முதன் முதலில் கல்வி பயின்றார்கள். அவர்கள் ஆங்கிலக் கல்வியை ஆங்கிலத்திலேயே வைத்துக் கொண்டார்கள். அப்போது தானே கிராமத்துக்காரர்கள் வர மாட்டார்கள். ஆனாலும் ஆங்கிலேயர்கள், 30 ஆண்டுகள் என்று சொன்னார்கள், 50 ஆண்டுகள் கழித்து கல்வியாளரைக் கொண்டு ஒரு குழுவை அமைத்தார்கள். அதன் பின்பு கூட, டாக்டர் இராதாகிருஷ்ணன் தலைமையிலே ஒரு குழு, சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஏறத்தாழ 30 ஆண்டுகள் துணைவேந்தராக இருந்த இலட்சுமணசாமி முதலியார் கல்விக் குழு, பல்கலைக் கழக மானியக் குழு என்று சொல்வோம். அப்படி மானியக் குழுக்களின் தலைவர்களாக இருந்த கோத்தாரி தலைமையில், யஷ்பால் தலைமையில் கல்விக் குழுக்கள் அமைக்கப்பட்டன. அதற்கு பின்பு கூட ஆச்சாரியா ராமமூர்த்தி தலைமையில் கூட ஒரு குழுவை அமைத்தார்கள். இவை அனைத்துமே கல்வியாளர்களைக் கொண்ட கல்விக் குழுக்கள். ஒரு சிலர் செயலாளராக இருப்பார்கள். அதில், ஒருங்கிணைப்பதற்கு, அறிக்கை எழுதுவதற்கு போன்ற உதவிகளுக்கு அவர்கள் இருப்பார்கள். இவர்களெல்லாம் யார் என்றால் மக்களுக்கு கல்வி எடுத்துச் செல்ல வேண்டும் என்ற எண்ணம் கொண்ட கல்வியாளர்கள்.

ஆனால், பாரதிய ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்த பின் சில கல்விக் குழுக்களை அமைத்திருக்கிறார்கள். இப்போது மட்டுமல்ல, Gentleman Politician என்று சொல்வார்களே, அந்த வாஜ்பாயின் காலத்திலேயே ஒரு குழுவை அமைத்தார்கள். வாஜ்பாய் 1999 முதல் 2004 வரை பிரதமராக இருந்தார். அப்போது அமெரிக்காவிற்கு பயணம் சென்றார். அப்போது, இந்தியர்களின் மத்தியில் பேசியபோது அவர் சொன்னார்: “ஏன் நீங்கள் உங்கள் கொள்கையை முழுமையாக நடைமுறைப்படுத்தாமல் இருக்கிறீர்கள்? என்று கேட்டார்கள். நாங்கள் இப்போது மற்ற கட்சிகளின் ஆதரவோடு ஆட்சியில் இருக்கிறோம். எங்களுக்கு முழுப் பெரும்பான்மை கிடைத்தவுடன் நிச்சயமாக நிறைவேற்றுவோம்’ என்றும் சொன்னார். இப்போது பெரும்பான்மை கிடைத்திருக்கிறது.



அந்த வாஜ்பாயி ஒரு கல்விக் குழுவை அமைத்தார். யாரெல்லாம் அந்தக் குழுவில் இருந்தார்கள் தெரியுமா? முகேஷ் அம்பானியும், குமார்மங்கலம் பிர்லாவும். அதன் பெயரே அம்பானி பிர்லா கமிட்டி. கல்வியைப் பற்றி யார் கருத்து சொல்வதென்றால் இரண்டு பெரு முதலாளிகளிடம் கொடுத்து இங்கு கல்விக் கூடங்களை எப்படி நடத்தலாம் என்று ஆலோசனை கேட்டார்கள். அவர்களும் ஆலோசனை கொடுத்தார்கள். முதலில் Vocational Education; கல்வியோடு சேர்த்து வேலைக்கான பயிற்சியும் கொடுக்க வேண்டும். ஆனால் நாம் தனியாக பொறியியல், வேளாண்மை போன்றவற்றை படிக்கிறோம். இவர்கள் கல்வியோடு சேர்த்தே படிக்க வேண்டும் என்று சொன்னார்கள். அதன் பின் அனைத்து செய்திகளும் Common National Content ஆக இருக்க வேண்டும். அதாவது நாடு முழுவதும் ஒரே கொள்கையாக இருக்க வேண்டும் என்று பரிந்துரை செய்தார்கள். Market Oriented Education என்றார்கள். சந்தையில் விலை போகிற கல்வியை கொடு என்றார்கள். மக்களுக்கு அறிவான கல்வி வேண்டாம். விலை போகிற கல்வி முறையை பரிந்துரைத்தார்கள். பொதுத் தேர்வு முறையை பரிந்துரைத்தார்கள். இவையெல்லாம் 2001 இல் கொடுத்த அறிக்கை.

அதன் பின் உலகெங்கும் உள்ள தனியார் பல்கலைக் கழகங்களை இங்கே நிறுவ வேண்டும் என்று பரிந்துரைத்தார்கள். வெளி நாட்டினரின் முதலீடுகள் நேரடியாக இருக்க வேண்டும் என்றார்கள். இவையனைத்தையும் விட முக்கியமான ஒன்றை பரிந்துரைத்தார்கள். எந்த கல்வி நிலையங்களிலும் அரசியல் நடவடிக்கை இருக்கக் கூடாது என்றார்கள்.

தற்போது பாஜக ஆட்சிக்கு வந்த பின், டெல்லி, அய்தரபாத் பல்கலைக் கழகங்களில் உள்ள மாணவர் தலைவர்களை மிகவும் கேவலமாக நடத்துகிறது. அரசியல் என்றால் எந்த அரசியல்? எங்களை ஆளுவது எந்த மாதிரியான கொள்கையாக இருக்க வேண்டும் என்பது தான் அரசியல். எங்களுக்கான உணவு திட்டம், கல்வி முறை, வேளாண்மை உதவி திட்டம் போன்றவைகள் தானே அரசியல். தேர்தலுக்கான ஓட்டு மட்டுமா அரசியல்? ஆனால் அதை பேசக் கூடாது என்று அப்போது சொன்னார்கள். இப்போது பெரும்பான்மை வந்த பின்பு நடைமுறைப் படுத்துகிறார்கள் என்பதை நாம் பார்க்கிறோம்.

வாஜ்பாயி மட்டும் தான் பணக்காரர்களை வைத்து ஒரு குழுவை அமைத்தார் என்று நினைக்க வேண்டாம். மோடி ஆட்சிக்கு வந்த பின்பு, போன ஆட்சிக் காலத்தில் ஒரு குழுவை அமைத்தார். டி.எஸ்.ஆர் சுப்ரமணியம் குழு. அவர் மத்திய அரசில் செயலாளராக இருந்தவர். அதில் இருந்த அனைவரும் அதிகாரிகள் தான். ஒருவர் மட்டும் கல்வியாளர் இருந்தார். ரஜ்புத் என்ற ஒருவர். பாரதிய ஜனதா கட்சியில், ஆர்.எஸ்.எஸ்.யைச் சார்ந்த கல்வியாளர். குஜராத், ராஜஸ்தான் கல்வி புத்தகங்களைப் பற்றி நிறைய விமர்சனங்கள் 2018இல் நடைபெற்றது. ஆள் இழுக்காத வாகனங்கள் இருந்ததாக அதில் கூறப்பட்டுள்ளது. புராண காலத்தில் புஷ்ப விமானம் இருந்தது என்றெல்லாம் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அந்த கல்வியாளர் தான் அந்த அறிக்கையைக் கொடுத்தார்கள். இப்போது ஒரு கல்விக் குழுவை அமைத்தார்கள். இஸ்ரோவின் முன்னாள் தலைவரைக் கொண்டு கல்விக் குழுவை அமைத்தார்கள். ஆங்கிலேயர் காலத்திலிருந்தே அமைத்த கல்விக் குழுக்கள் கல்வியாளர்களைக் கொண்டு அமைக்கப்பட்டன. இப்போது, வாஜ்பாயி காலமாகட்டும், மோடி காலமாகட்டும் அதிகாரிகளைக் கொண்டே கல்விக் குழுக்களை அமைப்பதின் மர்மம் என்ன? ஏனென்றால் அதிகாரிகள் தான் அரசு சொல்வதை அறிக்கையாக கொடுப்பார்கள்.

இந்த அறிக்கையில் கூட, ஆயிரக்கணக்கான பேரிடம் கருத்து கேட்டோம் என்றுதான் ஆரம்பிக்கிறார்கள். அதில் கல்வி தொடர்பாக கேட்கப்பட்ட அமைப்புகளை குறிப்பிடுகிறார்கள். அவை, அகில் பாரதிய வித்யாந்தி பரிஷித் (ABVP) ஆர்.எஸ்.எஸ் அமைப்பினுடைய மாணவர் அமைப்பு. இது இரண்டாவதாக வருகிறது. பாரத் சிக்சான் மண்டல். அடுத்து பாரதிய சிக்ஷா சோத் சனாக் சன்ஸ்தான் இந்த மூன்று அமைப்புகளின் கல்வியாளர்களிடம் தான் கருத்து கேட்டிருக்கிறார்கள். மற்றவர்களெல்லாம் பல்கலைக்கழகங்களில் இருப்பவர்களிடம் 217 நபர்களிடமும் கருத்து கேட்டதாக பட்டியல் வைத்திருக்கிறார்கள். அதில் ஒருவர் மட்டும்தான் கருப்பர்; சூத்திரர். வேலூர் வி.அய்.டி. வேந்தர் விஸ்வநாதனை பார்த்திருக்கிறார்கள். மற்றவர்களின், பெயர்களுக்குப் பின்னால் உள்ள ஜாதிப் பட்டத்தைப் பார்த்தாலே தெரிந்து கொள்ளலாம். கருத்துகூட நம்மவர்களிடம் கேட்கப்படவில்லை. இந்த கல்வி அறிக்கை எப்போது கொடுக்கப்பட்டது? 2018 டிசம்பர் 15இல் அப்போதிருந்த கல்வியமைச்சரிடம் கஸ்தூரி ரங்கன் கொடுக்கிறார். எப்போது வெளியிட்டார்கள்? 2019 மே மாதம் வெளியிட்டுவிட்டு, ஜூன் மாதத்திற்குள் அதன் மீதான மக்கள் கருத்தை சொல்ல வேண்டும் என்கிறார்கள். இந்தி, ஆங்கிலம் ஆகிய இரண்டே மொழிகளில் மட்டும் வெளியிட்டு கருத்து கேட்டார்கள். தேர்தல் முடியும் வரை காத்திருந்து தான் வெளியிட்டார்கள். அப்படி இந்த அறிக்கையில் உள்ள செய்திகள் தான் என்ன? அந்த அறிக்கையின் முன்னுரையில் எந்த நோக்கத்திற்காக இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டது என்று எழுதுகிறார். அதில் அவர் கூறுகிறார், ‘சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து எல்லோருக்கும் கல்வி சமமான கல்வி இதைப் பற்றித் தான் நாம் பேசிக்கொண்டிருந்தோமே தவிர, தரமான கல்வியைப் பற்றி எப்போதாவது பேசி இருக்கிறோமா?’ என்று அவர் ஒரு கேள்வியை முன் வைக்கிறார். அதற்கு மேலும் கூறுகிறார், ‘பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்டவர்கள் என்றுகூட எழுதவில்லை, ஆனால் ஒரு சில கூட்டத்துக்கு கல்வி கொடுக்க வேண்டும் என்று எண்ணியிருக்கிறீர்கள், தனி மனிதத் திறமையை வளர்க்க என்றாவது எண்ணியிருக்கிறீர்களா?’ என்று அறிக்கையில் எழுதியிருக்கிறார். இதை கூறுகிறவர் கல்விக் கொள்கையில் என்ன கொடுத்திருப்பார்?

### பறிபோகும் வேலை வாய்ப்புகள்

நாம் வேலை வாய்ப்பைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறோம். வேலை வாய்ப்பில் என்ன செய்திருக்கிறார்கள். நிறைய செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. அண்மையில் வந்த செய்தி, ‘மதுரையில் நடந்த இரயில்வே தேர்வில், 572 ஆட்களை தேர்வு செய்துள்ளனர். உயர் பதவிகளுக்கு இல்லை, இரயில் தண்டவாளங்களை சரி செய்யும் பணிகள். இந்த பணிகளுக்குக் கூட 572 பேரில் 11 நபர்கள் தான் தமிழ்நாட்டுக்காரர்கள். உடலுழைப்பை செய்யக்கூடிய இந்த வேலையில், இதற்கு கல்வி பெற்று வர வேண்டிய தேவை இல்லை. இதே போல், இதே பணிக்கு திருச்சியில் 272 பேரை எடுத்துள்ளனர். 16 பேர் மட்டும் தான் தமிழ்நாட்டைச் சார்ந்தவர்கள். இதற்கு முன்னால் எல்லாம் மத்திய அரசு தேர்வாணையம் ‘சி’, ‘டி’ பிரிவுகளுக்கு உள்ளூர்க்காரர்களை மட்டும் தான் எடுத்தது. அந்தந்த மாநிலத்தவர்களுக்கு வேலை கொடுப்பதுதான் பழக்கம் விதியே அப்படித்தான் இருந்தது. ஆனால் இப்போது எல்லாவற்றையும் மாற்றிக்கொண்டு வருகிறார்கள்.

வங்கித் தேர்வில் கூட மாநில மொழியில் புரிதல் இருக்க வேண்டும் என்பதை மாற்றி இப்போது ஆங்கிலத்தில் எழுதும்படி மாற்றி விட்டார்கள். ஆங்கிலத்தில் தேர்வெழுது என்றால் யார் வேண்டுமானாலும் எழுதலாம் என்று பொருள். மாநில மொழிகளை விடுத்து ஆங்கிலத்தில் எழுத சொன்னார்கள். அஞ்சல்துறைக்கு ஆட்களை எடுத்தார்கள். சென்னையில் ஒரு நிகழ்வு நடந்தது. ஒருவர் பதிவஞ்சல் அனுப்ப சொல்கிறார் தமிழில் எழுதி கொடுக்கிறார். அஞ்சல் அலுவலர் சொல்கிறார், எனக்கு தமிழ் தெரியாது, ஆங்கிலம் அல்லது இந்தியில் எழுதிக் கொடு என்கிறார். எங்கே இருந்து கொண்டு சொல்கிறார், தமிழ்நாட்டில் சென்னையில் உள்ள அஞ்சல் துறை அதிகாரி சொல்கிறார். அஞ்சல் துறையில் இருப்பவருக்கு மாநில மொழி தெரிந்திருக்க வேண்டாமா? மாநில மொழி தெரிந்திருக்க வேண்டும் என்பதால் தான் 100 விழுக்காடு மதிப்பெண்களில் 25 விழுக்காடு மதிப்பெண் மாநில மொழியில் எழுத வேண்டும். அப்படி தமிழிலும் எழுத வைத்தார்கள். அதில், ஹரியானா, ராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் தான் தமிழில் 25 மதிப்பெண்ணிற்கு 24 மதிப்பெண் வாங்கினார்கள். தமிழ்நாட்டை சார்ந்தவர்கள் 18 மதிப்பெண்ணிற்கு மேல் யாரும் வாங்கவில்லை. நல்வாய்ப்பாக தமிழ்நாட்டு தபால் துறை போஸ்ட் மாஸ்டர் ஜெனரலே இதைப் பார்த்து சந்தேகமாக இருக்கிறது என்று தேர்வை இரத்து செய்து விட்டார். இப்படி பித்தலாட்டத்தனமாக அகில இந்திய தேர்வுகள் நடைபெறுகின்றன.

(தொடரும்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# திராவிடர் விடுதலைக் கழக வெளியீடுகள் இப்போது ‘கிண்டி’லில் படிக்கலாம்

அமேசான் கிண்டில் (Amazon Kindle) என்பது மின்னூல்கள் (E-books) வாசிக்க உதவும் கருவி (Device). கிண்டில் என்பது ஒரு படிப்பான் (Reader). அமேசான் தளத்தில் இக்கருவியை வாங்கலாம். 4000 ரூபாயிலிருந்து 16000+ எனப் பல ரகங்களில் கிடைக்கிறது. எப்படியும் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கிண்டில் கருவிகளுக்கு ஆஃபர் போடுகிறார்கள். கவனித்துக் கொண்டே இருந்தால் வரும்போது வாங்கி பயன்படுத்திக் கொள்ளலாம்.

அல்லது நீங்கள் உங்கள் மொபைல் அல்லது கணினியில் கிண்டில் செயலியை (app) இலவசமாகத் தரவிறக்கம் செய்துகொண்டும் அதன்மூலம் நூல்களை வாங்கிப் படிக்கலாம். கூகுள் ப்ளே ஸ்டோர், ஆப்பிள் ஸ்டோர் போன்ற இடங்களில் கிண்டில் ஆப் இலவசமாகக் கிடைக்கும். உங்கள் மொபைலில் கிண்டில் செயலி (kindle app) டவுன்லோடு செய்து எப்போது வேண்டுமானாலும் வாசிக்கலாம். வாசிக்கும்போது இணைய இணைப்புகூட அவசியமில்லை

ஆனால் கிண்டில் கருவிக்கென சில பிரத்யேக மேன்மைகள் உண்டு என்பதை நினைவில் கொள்ளுங்கள் - உதாரணம்: கண் கூசாது, கவனம் சிதறாது, நீடித்த பேட்டரி, நீர் நுழையாது, பக்கம் திருப்ப பட்டன்கள் என்று ஏராள வசதிகள் உண்டு.

புத்தகம் வழக்கமான காகித வடிவில் இருக்காது. புத்தகத்தை வாங்க உங்களுக்கு அமேசானில் ஒரு அக்கவுண்ட் இருந்தால் போதும். பிரவுசர் வழியாகவோ, உங்கள் கிண்டில் கருவி மூலமோ, அல்லது கிண்டில் app மூலமாகவோ குறிப்பிட்ட புத்தகத்தை வாங்கலாம். க்ரெடிட் / டெபிட் கார்ட் வழியாகவோ, இண்டர்நெட் பேங்கிங் மூலமோ பணம் செலுத்தலாம். பணம் அமேசான் நிறுவனத்திற்கு க்ரெடிட் ஆனதும் புத்தகம் உங்கள் கணக்கில் வந்து உட்காரும். உங்களிடம் உள்ள எந்தக் கருவியிலும் / எத்தனைக் கருவியிலும் அப்புத்தகத்தை நீங்கள் டவுன்லோட் செய்துகொள்ளலாம்.

இந்த புத்தகம் இடத்தை அடைக்காது. அமேசானில் வாங்கும் நூல்கள் அனைத்தும் க்ளவுடில் சேகரமாகும். நீங்கள் விரும்பும்போது டவுன்லோட் செய்து படித்துவிட்டு, கருவியில் டெலீட் செய்துவிடலாம். மீண்டும் தேவைப்பட்டால் க்ளவுடில் இருந்து இறக்கிக்கொள்ளலாம். எத்தனைக் கருவி மாற்றினாலும் புத்தகம் அப்படியே இருக்கும். வாசிப்பை அடுத்தத் தளத்துக்கு நகர்த்த இதுவே சரியான வழி. வெள்ளத்தால், வெந்தணலால், கரையானால் புத்தகம் சேதமடையாது என்பது இதிலுள்ள மிகப் பெரிய நன்மை. ஒருவர் பதிவிறக்கம் செய்து இன்னொருத்தருக்கு தர முடியாது. நம்மிடம் உள்ள கருவியில் / மொபைலில் / கம்ப்யூட்டரில் மட்டுமே படிக்க முடியும்.

அடுத்ததாக கிண்டில் அன்லிமிடெட் என்பது ஒரு லெண்டிங் லைப்ரரி மாடல் போல. மாதத்துக்கு / வருடத்துக்கு என்று மொத்தமாகப் பணம் கட்டிவிட்டால் போதும். எத்தனை புத்தகங்களை வேண்டுமானாலும் எடுத்துப் படிக்கலாம். தனித்தனியே பணம் தரவேண்டாம். ஒரு சமயத்தில் 10 புத்தகங்களை நீங்கள் டவுன்லோட் செய்து கொள்ளலாம். இன்னொன்று வேண்டுமென்றால் பத்தில் ஒன்றைத் திருப்பிக் கொடுத்துவிட்டு அடுத்ததை எடுக்க வேண்டும்.

அச்சு நூல்களைவிட கிண்டிலில் படிக்கும் மின்னூல்களுக்கு விலை குறைவு. அச்சுப் புத்தகங்கள் அப்படி அப்படியேதான் கிண்டிலுக்கு ஏற்றப்படுகின்றன என்பதால் புத்தகத்தைப் புரட்டி படிப்பது போல்வே இருக்கும்

கிண்டிலில் ஏராளமான புத்தகங்கள் இலவச மாகவும் உள்ளன. சில புத்தகங்களுக்கு தினம் திடீர் திடீரென 0 விலை அறிவிப்பும் நடக்கும்.

கிண்டிலால் ஏராள நன்மைகள் உண்டு. பணத்தைச் சேமிக்கிறது; குறைந்த இடத்தை அடைக்கிறது. எடுத்துச் செல்வது எளிது; என்ன வாசிக்க வேண்டும் என்பதை முன்பே தீர்மானிக்க வேண்டியதில்லை என்பதால் பயணத்தின் போது வசதி. பெரும் எண்ணிக்கையில் புத்தகங்கள் கிடைக்கின்றன, அதோடு அவற்றைக் கடன் பெறவும் முடியும்.

### திவிக வெளியீடுகள்

இந்த விஞ்ஞான வளர்ச்சியான கிண்டிலில் திராவிடர் விடுதலைக் கழகம் பல்வேறு தலைப்பு களில் வெளியிட்ட புத்தகங்களை விற்பனைக்கு வைத்துள்ளது. இதன் மூலம் அச்சில் இல்லாத புத்தகங்களும், வெளிநாட்டு வாசகர்களுக்கும் கழக செயல்பாடுகளும், புத்தகங்களும், தந்தை பெரியாரின் கருத்துக்கள் மிகப் பரவலாக வேகமாக சென்று சேர்ந்துவிட ஏதுவாகிறது. புத்தகத்தை தேட புத்தக தலைப்பு மட்டுமல்லாமல் DVK Periyar என்றோ, கொளத்தூர் மணி என்றோ, விடுதலை இராசேந்திரன் என்றோ தேடலாம்

அந்த வரிசையில் கழகம் வெளியிட்ட அத்தனை புத்தகங்களும் தற்போது விற்பனைக்கு உள்ளது. குறிப்பாக குடிஅரசு இதழ் தொகுதி அனைத்தும் கிடைக்கும். கழகத்தின் வருடாந்திர பரப்புரை பயண வெளியீடுகளோடு, மேலும் பல புத்தகங்கள் உடனுக்குடன் கிடைக்கும் வகையில் இணைய தள அணியால் செயல்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

நிமிர்வோம் மாத இதழ்களும். வருடாந்திர முழக்கம் சிறப்பு கட்டுரைகளும் விரைவில் வெளிவர உள்ளது.

கழகத்தின் முகநூல் (www.facebook.com/dvk12) மற்றும் சமூக வலைதளங்களில் அவ்வப்போது இலவசமாக கழக வெளியீடுகள் அமேசான் கிண்டிலில் தரவிறக்க அறிவிப்புகள் வெளிவரும். அப்போது புத்தகங்களை விலையில்லாமலும் பதிவிறக்கி கொள்ளலாம்

**– விஜய்குமார், இணையதள பொறுப்பாளர்**

(முதல் பக்கத் தொடர்ச்சி)

‘பஞ்சமர்கள்’, ‘இஸ்லாமியர்கள்’, ‘கிறிஸ்தவர்கள்’. இவர்கள் அனைவரையும் ஒரே குடையின் கீழ் ‘திராவிடர்கள்’ என்ற அடையாளத்தில் இணைந்து நிற்கிறோம். ‘ஆரியம்’, ‘பார்ப்பனர்’ என்ற அடையாளத்தோடு வேத காலத்தில் தொடங்கிய போராட்டம் இன்று வரை தொடருகிறது. எனவே ‘திராவிடர்’ அடையாளம் வரலாற்றுத் தேவையாகியுள்ளது.

அன்று பார்ப்பனர்கள் ‘அவதாரங்களாக’ வந்தார்கள். இன்று ஆட்சி அதிகாரத்துடன் வருகிறார்கள். நாடாளுமன்றம், நிர்வாகம், நீதிமன்றம், இராணுவம் என்ற அரசமைப்புகளின் ஆதரவோடு வெகுமக்கள் மீது இந்த போர் தொடுக்கப்பட்டிருக்கிறது. 340யை பறித்தார்கள். பாப்ரி மசூதியை இடித்து, ‘இராமனுக்கு’ சொந்தமாக்கினார்கள். இனங்களின் மாநிலங்களின் அடையாளங்களைப் பறிக்கிறார்கள். இப்போது குடியுரிமைச் சட்டத்திலும் கை வைக்கிறார்கள். இப்போது நடப்பதும் பார்ப்பனர் - பார்ப்பனரல்லாதார் போராட்டத்தின் தொடர்ச்சி தான்!

**– இரா**

55 வருட பட்டின் பாரம்பரிய ஸ்தாபனம்...
**சிந்தாமணி சில்க்ஸ்**
கைத்தறி திருமண பட்டு சேலை தயாரிப்பாளர்
& மொத்த விற்பனையாளர்
ஹோல்சேல் கடை
சிந்தாமணியூர், ஓமலூர் வழி, சேலம்.(DT).
04290 248304/ 90952 48304
chinthamanisilks | www.chinthamanisilks.com

## நாகை திருவள்ளுவன் மீதான பொய் வழக்குகளைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்



மேட்டுப்பாளையத்தில் சுவர் இடிந்து விழுந்து 17 பேர் இறந்ததற்கு நீதிக் கேட்டு போராடிய நாகை திருவள்ளுவன் மீது தாக்குதல் நடத்தி, பொய் வழக்குகள் பதிந்து சிறையிலிட்டதைக் கண்டித்து பெரியாரிய உணர் வாளர்கள் கூட்டமைப்பு சார்பாக கண்டன ஆர்ப் பாட்டம் 09.12.2019 அன்று மாலை 3 மணிக்கு சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்றது.

படுகொலை செய்யப்பட்ட தலித் மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும், சுவர் கட்டிய சிவசுப்ரமணியன் மீது வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்கு பதிய வேண்டும், தோழர் நாகை திருவள்ளுவனை தாக்கிய காவலர்கள் மீதும் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்து அவர்களை உடனடியாக பணி இடைநீக்கம் செய்யப்பட வேண்டும், தோழர் நாகை திருவள்ளுவன் மீது போடப்பட்ட அனைத்து பொய் வழக்குகளும் திரும்ப பெற்று அவரை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார். மேலும், பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பை சேர்ந்த பல்வேறு அமைப்புகளை சேர்ந்த தலைவர்கள் கலந்துகொண்டு கண்டன உரையாற்றினர்.

## குத்துச்சண்டை போட்டியில் வென்றவர்களுக்கு மயிலை தி.வி.க. நினைவுப் பரிசு



அகில இந்திய மற்றும் தமிழ்நாடு அளவிலான குத்துச் சண்டை போட்டியில் சென்னை மயிலாப்பூர் பகுதியைச் சேர்ந்த தோழர்கள் கலந்து கொண்டனர். அதில் பதக்கம் வென்றவர் களுக்கு திவிக சார்பில் நினைவு பரிசுகளை கழகத் தலைவர் கொளத்தூர் மணி மற்றும் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆகியோர் வழங்கினர்.

அகில இந்திய போட்டியில் அஸ்வின் - வெண்கலம், பிரவீன் - வெள்ளி, மகேஷ் - வெள்ளி, ராஜ் - வெண்கலம், சரண் - வெண்கலம், மாணிக்கம் - வெண்கலம், கார்த்திக் - வெண்கலம் வென்றனர். தமிழ்நாடு அளவிலான போட்டியில் மாணிக்கம் தங்கப் பதக்கத்தையும், கார்த்திக் வெண்கல பதக்கத்தையும் வென்றனர். நிகழ்வில் கழக வார ஏடான ‘புரட்சிப் பெரியார் முழக்க’த்திற்கான 100 சந்தா மற்றும் மாத ஏடான நிமிர்வோமிற்கான 20 சந்தா தொகைகளை கழகத் தலைவர் மற்றும் பொதுச் செயலாளரிடம் மயிலை பகுதி சார்பாக தோழர்கள் வழங்கினர்.

## ‘குடியுரிமை’ சட்ட நகல் எரிப்பு

ஈழத் தமிழர்களையும், இந்திய வம்சாவளி முஸ்லிம்களையும் புறக்கணிக்கும் புதிய குடியுரிமைச் சட்டத்தைத் திரும்பப் பெறக் கோரி சட்டத் திருத்த நகல் எரிப்புப் போராட்டம் மனிதநேய ஜனநாயக கட்சியின் பொதுச் செயலாளர் தமிமுன் அன்சாரி ஒருங்கிணைப்பில், 12.12.2019 அன்று மாலை 4 மணிக்கு, சென்னை அண்ணா சாலை தலைமை தபால் நிலையம் எதிரில் (தர்ஹா அருகில்) நடைபெற்றது. இந்த போராட்டத்தில் மனிதநேய ஜன நாயகக் கட்சி பொதுச் செயலாளர் தமிமுன் அன்சாரி, தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் வேல் முருகன், விடுதலை தமிழ்ப் புலிகள் கட்சித் தலைவர் குடந்தை அரசன், திராவிடர் விடுதலை கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் மற்றும் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், மாவட்ட செயலாளர் உமாபதி, தந்தை பெரியார் திராவிடர் கழக சென்னை மாவட்டப் பொறுப்பாளர் குமரன், திராவிட இயக்கத் தமிழர் பேரவை பொதுச் செயலாளர் சுப வீரபாண்டியன், தமிழ்நாடு முசுலீம் முன்னேற்ற கழகப் பொதுச் செயலாளர் ஹைதர் அலி, இயக்குநர் வ.கௌதமன், தமிழ்ப்புலிகள் கட்சி மாநில பொதுச் செயலாளர் பேரறிவாளன் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த தலைவர்கள் பங்கேற்றனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 20th December 2019

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN